ஆவேசங்கள் வந்தாலும், நீங்கள் வார்த்தைகளை அளந்து இந்த அவையில் பேசுவது இந்த அவையின் மரபைக் காப்பாற்ற பயன் படுவதாக இருக்கும். என்னைப் போன்றவர்கள் உங்களுக்கு யோசனை சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இந்த அவைக்கு நான் புதியவன். நீங்கள் நீண்ட நெடுங்காலம் இந்த அவையில் இருந்தவர்கள். ஆகவே, அப்படிப்பட்ட வார்த்தைகள் சபைக் குறிப்பில் இருக்குமானால் அது நல்லதல்ல. அதை நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே அவைகளை நீக்கி விட உத்தரவிட்டு இருக்கிறேன்.

(5) அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 41 (3)ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. விதி 41 (3)—ன் கீழ் இரண்டிற்கு மேற்பட்ட பொருள்கள் எடுத்துக் கொள்ளக் கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

(6) கவன ஈர்ப்புகள்.

(அ) மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்கள் வழங்காமல் இருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து விதி 41-ன்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றை திருவாளர்கள் ரா. உமாநாத், ஆர். கிருஷ்ணன், திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் கொண்டு வருவார்கள்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே' மேல்நிலைப் பள்ளிகள் உள்பட, அனைத்துப் பள்ளி மாணவர் களுக்கும், தமிழகத்திலுள்ள பல இடங்களில் இன்னும் புத்தகங்கள் வழங்காமல் இருப்பதால், பள்ளி மாணவர்க ளிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து, கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.